இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவை (தனியார்) கம்பனி -2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவை (தனியார்) கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கம்பனியின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு (SLFRS) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு (SLFRS) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் கம்பனியை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு

அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுடனான (SLFRS) இணக்கமின்மைகள்

உரிய நியமங்களுடனான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்		முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS for SMEs) பந்தி இலக்கம் 4.5 இற்கு இணங்க அறிக்கையிடல் திகதியிலிருந்து 12 மாதங்கள் காலத்திற்குள் முதிர்ச்சியடைகின்ற சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்த வேண்டிய போதிலும் கம்பனியால் 2025 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதிர்ச்சியடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 10 மில்லியனான நிலையான வைப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க நடைமுறைச் சொத்துக்கள் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததனால் கம்பனியின் இறுதி நிதிக் கூற்றுக்களின் மூலம் அதன் திரவத் தன்மை சரியாக வெளிப்படுத்தபபட்டிருக்கவில்லை.	சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகனளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு இணங்கியதாக நடைமுறைச் சொத்துக்களை வகைப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியதனால் 2025 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சரியாக வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு இணங்க நிதிச் சொத்துக்கள் முறைப்படியாக வகைப்படுத்தப்படுதல் வேண்டும.
(ஆ)	சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS for SMEs) பந்தி இலக்கம் 10.13 மற்றும் 10.23 இன் பிரகாரம் கொள்கை	சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் இலக்கம் 10.21 இற்கு இணங்க பிழைகள் சரிசெய்யப்பட்டுள்ளன.	சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுககு

மாற்றங்கள் மற்றும் கடந்த ஆண்டின் பிழைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற வரலாற்று ரீதியான செம்மையாக்கல்கள் சம்பந்தமாக மேற்கூறிய கொள்கை மாற்றங்கள் அல்லது பிழைகளின் தன்மை, தாக்கமளிக்கின்ற் வரிசை விடயங்கள் மற்றும் அதன் அளவினைக் காட்டி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்த 2017 ஆம் ஆண்டின் போது நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 28.9 மில்லியன் மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது Mccullum Gate வளவினை வாடகைக்கு வழங்கியமை சம்பந்தமாக துறைமுக அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய குத்தகை வாடகை செலவு ரூபா 2.7 மில்லியன் சம்பந்தமாக அவ்வாறான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் பந்தி இலக்கம் 10.12 மற்றும் 10.21 இன் பிரகாரம் உரிய செலுத்த வேண்டிய சொலவுகளுக்கான ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீண்டும் செம்மையாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1. 2017 இல் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் Tangyo Haulage தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 28.9 மில்லியன் பொறுப்புக்கள் நடைமுறை ஆண்டின் போது அடையாளம் காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு செம்மையாக்கல் என்பதனால் திரண்ட வருமானத்திற்கு செம்மையாக்கி எதிர்கால பொறுப்பு அடையாளங்காணப்பட்டுள்ளது.

2. 2021 ஆம் ஆண்டின் போது Mccullum Gate வளவினை குத்தகைக்கு வழங்கியமை சம்பந்தமாக துறைமுக அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய குத்தகை வாடகை செலவு ரூபா 2.7 மில்லியன் நடைமுறை ஆண்டின் போது செலுத்தப்பட்டதனாலும் நியம இலக்கம் 10.22 இன் பிரகாரம் நடைமுறை ஆண்டில் உரிய செம்மையாக்கலை மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதனாலும் நடைமுறை ஆண்டில் அடையாளங்காணப்பட்டுள்ள மற்றும் கொடுத்து தீர்த்துவைக்கப்பட்ட ஒரு பொறுப்பினை அதற்கு உரியதான முன்னை காலப்பகுதிக்கான செம்மையாக்குதல் மிகவும் நடைமுறைச் சாத்தியமான முறைமை

இணங்க கடந்த ஆண்டு செம்மையாக்கல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

		என்பதனால் அதற்கிணங்க இந்த செம்மையாக்கல் செயயப்பட்டுள்ளது.	
(இ)	சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS for SMEs) பந்தி இலக்கம் 17.29 இற்கு இணங்க சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் அகற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மேற்கூறிய சொத்தினை அகற்றிய திகதியை தீர்மானிப்பதற்கான நிபந்தனை தெளிவாகக் காட்டப்பட்டுள்ளதுடன் கம்பனியால் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட மற்றும் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தொடக்க கிரயம் ரூபா 5,196,006 ஆன சொத்துக்களின் நிதிப் பெறுமதியை மதிப்பீடு செய்து கம்பனியின் ஊழியர்களுக்கு முன்னுரிமை அளித்து மீண்டும் விற்பனை செய்வதற்காக துறைமுக அதிகாரசபையின் கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கையில் நியமத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு முரணாக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டு (Derecognized) இருந்தது. மேலும் சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிகையிடல் நியமத்தின் (SLFRS for SMEs) பந்தி இலக்கம் 17.19 இற்கு இணங்க சொத்துக்களின் எச்ச பெறுமதி அல்லது பயனதரும்	பூச்சிய கிரயத்தின் அடிப்டையில் நீக்கப்பட்ட சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்வதற்கு உட்பட்டுள்ளதுடன் பயன்தரும் ஆயுள் காலத்திற்கு மிகையாகச் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான நிதி அறிக்கையிடல் நியமம் இலக்கம் 17.27(அ),(ஆ) இன் பிரகாரம் இச்சொத்துக்களை பயன்படுத்துவதன் மூலம் அல்லது அகற்றுவதன் மூலம் எதிர்கால பொருளாதார நலக் எதிர்பார்க்கப்படாததனால் பணிப்பாளர சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கம்பனி இச்சொத்துக்களை அகற்றி கணக்குகளில் செம்மையாக்கியுள்ளது.	நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை அகற்றும் போது மேற்கூறிய சொத்தில் குறிப்பிடத்தக்க அளவு ஆபத்து மற்றும் பிரதிபலனை கொள்வனவு செய்பவருக்கு மாற்றுதல் அச்சொத்துக்களாக இன்னும் முகாமைத்துவத்தின் தலையீடு இல்லாதிருத்தல் மற்றும் மேற்கூறிய கொள்வனவாளருக்கு உரிய எதிர்கால பொருளாதார நலன் வியாபாரத்திற்குள் பாய்ச்சப்படுதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனமாக இருத்தல் வேண்டும்.

	ஆயுள் காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்யப்படாது பேணப்பட்டு வந்திருந்தமை மற்றும் உரிய சொத்துக்கள் இன்னும் கமபனியின் சொத்துக்களாக இல்லாததன் அடிப்படையில் அச்சொத்துக்களை நீக்கும் சரியான இலாபம் கம்பனிக்கு உட்பாய்ச்சும் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது.		
(ஈ)	கம்பனியால் துறைமுக அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்ட -08 வேளையாட்களுக்கு சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை உரிய காலத்தில் செலுத்தாமையின் காரணமாக தொழிலாளர் பிணக்குகள் சபையில் தொடுக்கப்பட்ட வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 4.3 மில்லியனை செலுத்துவதற்கு கம்பனிக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. அப்பெறுமதியை துறைமுக அதிகாரசபையிடமிரந்து மீளளிப்புச் செய்யும் எதிர்பார்ப்பில் ஆரம்பத்திலேயே துறைமுக அதிகாரசபையிடமிருந்து கிடைக்க வேண்டிய பணமாகவும் கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. பின்னர் அத்தொகை கம்பனியால் தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் துறைமுக அதிகாரசபைக்கு எழுத்து மூலம் தெரிவிக்காது கிடைக்க வேண்டிய பணத்தை அறவிட முடியாதவையாக கருதி 25 சதவீத வீதமாக 04 ஆண்டுகளுக்குள் பதிவழிபபதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தீர்மானிக்கப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டின் போது ரூபா 1.2 மில்லியன் அறவிட	துறைமுக அதிகாரபைக்கு தேவையான மேலதிக ஆளணியினர் ஒப்பந்தம்/ சேவை ஒப்படைப்பு அடிப்படையில் கம்பனிக்கு சேர்க்கப்பட்டுள்ள அந்த ஊழியர் கிரயத்தை துறைமுக அதிகார சபையிடமிருந்து மீளளிப்புச் செய்வதன் கீழ் மேற்கூறிய கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க ஊழியர்களுக்கான கொடுப்பனவு கம்பனியின் ஒரு செலவாக அல்லது அச்செலவினை மீளளிப்புச் செய்தல் செயற்பாட்டு வருமானமாக அடையாளங்காண முடியாது. மேலும் இக்கொடுப்பனவு மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என துறைமுக அதிகாரசபையினால் எழுத்துமூலம் தெரியப்படுத்தப்படவில்லை. துறைமுக அதிகார சபைக்கும் கம்பனிக்குமிடையேயான சேவை உடன்படிக்கையின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் இழப்பீடு, நியதிச்சட்ட கொடுப்பனவுகள் என்பனவற்றை கம்பனிக்கு தீர்த்துவைப்பதற்கு இணக்கப்பாடு வெளியிடப்பட்டுள்ளது. எனவே அந்த சம்பள	நிறுவனத்தினால் எதிர்கால பொருளாதார பிரதிபலன்களின் வெளிப்பாய்ச்சல் சாத்தியமான சந்தர்ப்பங்களில் மற்றும் அதனை நம்பகரமாக அளவிட கூடிய சந்தர்ப்பங்களில் ஒரு செலவாக அடையாளங்காணப்படுதல் வேண்டும்.

முடியாத கடன் நட்டம் நிதிக்கூற்றுக்கில் செம்மையாக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இலங்கை அறிக்கையிடல் நியமத்தின் பந்தி இலக்கம் (SLFRS for SMEs) 2.27 இன் பிரகாரம் செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் பணம் அடையாளம் காணப்பட்டிருக்காததுடன் மேற்கூறிய செம்மையாக்கலின் காரணமாக தேறிய தாக்கமானது ரூபா 3.1 மில்லியனால் நிறுத்திவைத்திருந்த இலாபம் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

கொடுப்பனவினை இக்கம்பனியின் ஒரு செலவாக அடையாளங்காண முடியாது மேலும் கிடைக்க வேண்டிய மீதிக்காக அறவிட முடியா கடனுக்காக ஒதுக்கீடு செய்தல் கம்பனியின் கொள்கைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது.

(உ) சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை அறிக்கையிடல் நியமம் (SLFRS for SMEs) பந்தி இலக்கம் 11.21 இற்கு இணங்க நிறுவனத்தினால் ஒவ்வொரு ஆண்டும் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான அறவிட முடியா கடனை மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் அறவிடமுடியா கடன் நட்டம் இடம்பெற்றுள்ளது என்பதற்கு சான்றுகள் காணப்படுமாயின் அறவிடமுடியா கடன் நட்டம் அடையாளம் காணப்படுதல் வேண்டும். எனினும் கம்பனியால் நியமத்திற்கு இணக்கமற்ற வகையில் அறவிட முடியா கடனுக்கான சான்றுகள் இன்றி (without an objective evidence) மற்றும் பிற்போட்ட அடிப்படையில் ரூபா 6.1 மில்லியன் ஆன இரண்டு கடன்பட்டோர மீதிகளுக்காக 04 ஆண்டுகளில இலாபத்திற்கு எதிரீடு செய்யும் வகையில் ஒரு ஆண்டிற்கு 25 சதவீத படியாக அறவிட முடியா

அறவிட முடியா கடனுக்காக ஒதுக்கீடு செய்தல் கம்பனியின் கொள்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த மீதிகளிலிருந்து எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு முடியாது இருக்குமாயின் அக்காலப்பகுதி தொடர்பாக அதனை இலாபத்திற்கு எதிராக பதிவழிக்க வேண்டி ஏற்படல் சிறிய அளவில் இலாபத்தை பெற்றுககொள்கின்ற இவ்வாறான ஒரு கம்பனிக்கு நடைமுறைச் சாத்தியமற்றதாக உள்ளது. எனினும் அந்த மீதிகள் அறவிடப்படாதவை என்பது தெளிவாக அடையாளங்காணப்படல் அல்லது அறவிட முடியாத கடன் நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதற்கு சான்றுகள் இல்லாததனால் அந்த மீதிகளை ஐயக்கடனாக ஒரே தடவையில் பதிவழிபிபதற்கும் கம்பனிக்கு இயலுமை இல்லை.

நியமத்தின் பிரகாரம் அறவிட முடியாத கடன் நட்டத்தை அடையாளங்காண்பதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கடனுக்கு ஏற்பாடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3.05 மில்லியன் அறவிட முடியா கடன் அடையாளம் காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க கம்பனியின் நிறுத்திவைத்தல் இலாபம் அத்தொகையால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.		

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படட நிலையான வைப்பு வருமானம் சம்பந்தமாக கணக்காய்வில் கணிப்பீடு செய்தலுக்கும் கம்பனியின் கணிப்பீட்டிற்குமிடையே ரூபா 620,041 வித்தியாசம் காணப்பட்டதுடன் அதற்கிணஙக அத்தொகையால் கம்பனியின் இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 21,915,167 ஆக இருந்ததுடன் ஆரம்ப கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட தவறுகள் நடைமுறை ஆண்டில் கம்பனியின் கணிப்பீட்டு தவறுகள் மற்றும் காலப்பகுதி தொடர்பாக குறையாக கணக்காய்வு செய்யப்படாமையின்	உரிய செம்மையாக்கல்களை 2025 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	நிலையான வைப்புக்கள் தொடர்பாக காலப்பகுதிக்குரிய சரியான வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானத்தினை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	காரணமாக இடம்பெற்ற தவறுகள் முறையே ரூபா 533,378, ரூபா 636,878 மற்றும் ரூபா 446,451 என்பனவாக கம்பனியின் பெறவேண்டிய வட்டி வருமானம் மொத்தமாக ரூபா 1,616,708 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.		
(ஆ)	காலி முகத்திடலின் சுற்றாடலில் அமைந்துள்ள 62 கடைகளை குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக 2024 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை ரூபா 34,724,856 கம்பனியால் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியின் வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய வருமானம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	நியமம் இலக்கம் 2.23 மற்றும் 2.27 இன பிரகாரம் ஒரு வருமானத்தை அடையாளம் காண்பதற்காக அந்த விடயம் சம்பந்தப்பட்ட பொருாதார நலன் நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படுவதற்கு வாய்ப்பிருத்தல் காட்டப்பட்டுள்ளது. காலி முகத்திடல் சுற்றாடலின் உரிமை சம்பந்தமாகக் காணப்படுகின்ற விவாதத்திற்குரிய நிலைமையின் காரணமாக கடைகளுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட எந்த உடன்படிக்கையும் பதிவு செய்யப்பட்டிருககாததுடன் அவ்வாறான மாதாந்த வாடகைப் பணத்தை சேகரிப்பதற்கு சட்டரீதியான ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எனவே அறவீடு செய்வதற்கு முடியாதுள்ள பணத்தை வருமானமாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதன் மூலம் நடைமுறை ஆண்டின் இலாபம் மிகைக் கணிப்பீடு செய்யப்படுவதுடன் அதன் மூலம் கம்பனியின் இலாபம் தொடர்பாக சரியான விளக்கம் கிடைக்கவில்லை.	நிறுவனத்தினால் உடன்படிக்கையை சட்டரீதியாக்குவதற்கும் வருமானத்தை அடையாங் காண்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கம்பனியின் நடைமுறை கணக்கிற்குரிய வங்கி கணக்கிணக்க கூற்றின்	இணங்கிக் கொள்ளப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டிற்கான	காலங்கடந்த காசோலைகளையும் அடையாளங்காணப்படா

பிரகாரம் 06 மாதங்களை மிகைத்து வழங்கிய போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காலங்கடந்த 05 காசோலைகளின் பெறுமதி ரூபா 910,000 ஆக இருந்ததுடன் 2024-04-09 ஆந் திகதி பதியப்பட்டிருந்த அடையாளங்காணப்படாத ரூபா 604,313 இனை அடையாளங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்குகளை தயாரிக்கும் போது இறுதி செம்மையாககல்கள் மேற்கொள்ளப்படும்.	த கொடுக்கல் வாங்கல்களையும் அடையாளங்கண்டு சரியாக செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.5.3 தாபனம் தொடர்ந்து நிலைத்திருத்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 8,001,721 ரூபா 23,500,115 மற்றும் ரூபா 10,420,717 ஆக கம்பனி தொடர்ச்சியாக செயற்பாட்டு நட்டத்தை அடைந்திருந்ததுடன் அக்காலப்பகுதியில் கம்பனியின் திரவத்தன்மை நிலைமை 1.7 சதவீதத்திலிருந்து 1.09 சதவீதம் வரை வீழ்ச்சியடையும் போக்கினை காட்டியிருந்தது. அதற்கிணங்க தொடர்சசியான ஒரு தொழில் முயற்சியாக கம்பனியை பேணும் இயலுமை தொடர்பாக ஆபத்து காணப்பட்டது.	கம்பனியின் செயற்பாட்டு இலாபமானது துறைமுக செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் நாட்டில் காணப்பட்ட கௌருளாதார மந்த நிலைமை, துறைமுக செயற்பாடு தொடர்பாக தாக்கமளித்துள்ளதனால் கம்பனியின் தரகு வருமானம் குறைவடைவதற்கு அது தாக்கமளித்திருந்தது. நிறுவனம் 2016 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து செயற்பாட்டு நட்டம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்து ம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் பாதுகாக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் செயற்பாட்டு 56% குறைவடைந்துள்ளதுடன் 2025 ஆம் ஆண்டின் போது இலாபம் இலக்காக கொள்ளப்பட்டுள்ளது.	செயற்பாட்டு நட்டத்தை குறைப்பதற்கும் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதனை பாதுகாப்பதற்கும் கம்பனியால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நட்டமடையும் செயற்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுன்னது.	

1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மூன்றாந் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக துறைமுக அதிகார சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மெகலம்லொக் கெட் வளவு கம்பனியால் ட்ரவல் டோக் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 ஏப்ரல் மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை முன்னர் குத்தகைக்கு வழங்கிய கம்பனியால் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய குத்தகை, மின்சாரப் பட்டியல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் முழு நிலுவைப் பணம் ரூபா 4,477,679 மீளாய்வாண்டின் இறுதி வரையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. மேலும் குத்தகை உடன்படிக்கையானது 1949 இன் 13 ஆம் இலக்க ஆவணங்களை பதிவுசெய்யும் கட்டளைச் சட்டத்தின் IV ஆம் அத்தியாயத்திற்கு இணங்க பதிவு செய்யப்பட்டிருக்காததனால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க முடியாத ஆபத்து காணப்பட்டது.	இணங்கி கொள்ளப்படுகின்றது. இந்த நிலுவைப் பணத்தை அறவீடு செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக துறைமுகங்கள், கப்பல்துறை, போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சினூடாக சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கம்பனிக்கும் Travel talk இற்கும் இடையே மேலும் வளவிற்காக ஒரு உடன்படிக்கை காணப்பட்டிருந்தும் துறைமுக அதிகார சபைக்கும் கம்பனிக்குமிடையே ஒரு உடன்படிக்கை இல்லாததனால் மூன்றாந் தரப்பினருடன் காணப்பட்ட உடன்படிக்கையை சட்டரீதியாக பதிவு செய்வதற்கான இயலுமை காணப்படவில்லை.	உரிய செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எழுத்து மூலம் மற்றும் சட்ட ரீதியான உடன்படிக்கையின் கீழ் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க நிதி அமைச்சின் அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டுக் கையேட்டின் 6.2(V) ஆம் அத்தியாயம்	கடந்த இரண்டு ஆண்டுகளின் போது சராசரி வருடாந்த வருமானம் ரூபா 30 பில்லியனுக்கு குறைவான மீண்டுவரும் செலவுகளுக்காக பாதீட்டு நிதி ஏற்பாட்டு உதவி கிடைக்காத அரசாங்க தொழில் முயற்சிகளால் தமது மேலதிக நிதியை அரசாங்க வங்கி, திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகளில் மாத்திரம் முதலீடு செய்ய வேண்டிய போதிலும் கம்பனியால் ரூபா 100 மில்லியன் ஒரு தனியார் வங்கியில் நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்தது.	வட்டி வீதம் தொடர்பாக பரீட்சித்து மிகவும் இலாபகரமான மாற்று வழியாக அதிக வட்டி வீதத்துடன் ஒரு தனியார் கம்பனியில் பணிப்பாளர சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 05 ஆண்டுகள் காலத்திற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுகளுக்கான செயற்பாட்டு கையேட்டில் காட்டப்பட்டுள்ள விடங்களுக்கு இணங்க மிகை நிதிகள் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.
(ஆ)	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் இலக்கம் 123 மற்றும் 124	ஒவ்வொரு கம்பனியும் தமது பங்கு உரிமையாளர்களின் விபரங்களுடன் பங்குகளை பதிவுசெய்யும் பதிவேடு (Share Register) பேணப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் பங்குகளை பதிவுசெய்யும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் 11 பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழின் பிரதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	இணங்கிக் கொள்ளப்படுகின்றது.	அதிகாரச்சட்டத்தின் பிரிவின் பிரகாரம் பங்குகளை பதிவுசெய்யும் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.

1.8 தகவல் தொழில்நுட்ப (IT) பொது கட்டுப்பாட்டு முறைமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற கணனி கணக்கீட்டு முறைமையை தயாரித்தல் (customized) மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கணக்காண்டு தொடர்பான கணக்கீட்டு நடவடிக்கைகளை முடிவு செய்து கணக்காய்விற்கு கணக்குகளை சமர்ப்பித்ததன் பின்னரும் (after locking the Fiscal year) முறைமைகளுக்ு கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கும் இயலுமை காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வு செய்த கணக்கீட்டுத் தரவுகள நிரந்தரமாகவும் நம்பகரமாகவும் காணப்படுகின்றது என்ற உறுதிப்படுத்தலை வழங்குவதற்கு முடியாதுள்ளது.	கம்பனியால் 2025 ஆம் ஆண்டின் போது கணக்கீட்டு முறைமையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது மிகவும் சரியானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான நடைமுறைகளுக்கு இணங்க கணக்குகளை தயாரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இக்குறைபாடு நீக்கப்பட்டுள்ளது.	கணக்கீட்டு தரவுகள் நிரந்தரமாகவும் நம்பகரமாகவும் காணப்படுகின்றது என்ற உறுதிப்படுத்தலை வழங்குவதற்கு முடியுமான வகையில் கம்பனியின் கணக்கீட்டு முறைமை தயாரிக்கப்படுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நட்டம் ரூபா 10,420,717 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 23,500,115 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 13,079,398 முன்னேற்றம் அவதானிக்கபபட்டது. இந்த முன்னேற்றத்திற்கு வேலையாட்களை வாடகைகளுக்கு வழங்கும் சேவையிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 62,827,844 ஆல் அதாவது 851 சதவீத்த்தால் அதிகரித்தல் சேவைக் கட்டணங்களிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 19,698,807 ஆல் அதாவது 113 சதவீதத்தால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

விடயம்	2024	2023	அதிகரித்தல்/ (குறைவடைதல்)	சதவீதம் % அதிகரித்தல்/ (குறைவடைதல்)
வருமானம்	ரூபா	ரூபா	ரூபா	
சேவைக்கட்டண வருமானம்	37,155,730	17,456,923	19,698,807	113
சுகாதார சேவைகள் வருமானம்	96,723,913	71,640,105	25,083,808	35
காலிமுகத்திடலிருந்து பெற்ற வருமானம்	26,591,107	21,111,719	5,479,388	26
வேளையாட்களை வாடகைக்கு வழங்கும் சேவை வருமானம்	70,208,026	7,380,182	62,827,844	851
ஏனைய வருமானம்	1,115,000	594,857	520,143	87
தாபன மற்றும் நிருவாக செலவுகள்				
சம்பளமும் கூலியும்	24,088,096	18,994,361	5,093,735	26
உயர் முகாமைத்துவ சம்பளம்	6,723,505	2,315,000	4,408,505	190
பணிக்கொடை செலவுகள்	4,467,488	2,579,104	1,888,384	73

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் சேவைக் கட்டணங்களிலிருந்து பெற்ற வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 19,698,807 ஆல் அதாவது 113 சதவீதத்தால் அதிகரித்துக காணப்பட்டது. கம்பனியால் உள்ளக கொள்கலன் போக்குவரத்து சேவை (Inter Terminal Trucking) என்ற பெயரில் ஒரு புதிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வருமானம் உழைத்திருத்தல் இற்கு காரணமாக இருந்தது.

(ஆ) சம்பளமும் கூலியும், உயர் முகாமைத்துவ சம்பளம், பணிக்கொடை செலவுகள் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 5,093,735, ரூபா 4,408,505 மற்றும் ரூபா 1,888,384 ஆல் அதாவது 26 சதவீதம் 190 சதவீதம் மற்றும் 73 சதவீத்தால் அதிகரித்திருந்ததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ஊழியர் சம்பளம் அதிகரித்தல் இதற்கு காரணமாக இருந்தது.

2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் பின்வருமாறாகும்.

	2024	2023
திரவத் தன்மை விகிதம்		
நடைமுறை விகிதம்	1.1	1.5
விரைவு விகிதம்	1.1	1.5

திரவத் தன்மை விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் நடைமுறைச் சொத்துக்கள் அதிகரிப்பதனை விட அதிக சதவீதத்தினால் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்தல் எதிர்மறையான தாக்கத்திற்கு காரணமாக இருந்தது. காலிமுகத்திடல் மைதானத்தை நிருவகிக்கும் செயற்திட்டத்தின் கீழ் கடை உரிமையாளர்களிடமிருந்து மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் 2017 ஆம் ஆண்டில் நீதிமன்ற தீர்ப்பின்

அடிப்படையில் ஒரு தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 28.9 மில்லியன் மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய ஒரு செலவாக அடையாளம் காணல் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கம்பனியால் மேற்கொள்ளப்படுகின்ற காலிமுகத்திடரல் மைதானத்தினை நிருவகிக்கும் செயற்திட்டத்தின் 2020 ஆம் அண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான கடந்த 05 ஆண்டுகளில் தொடர்ச்சியாக நட்ட நிலைமை காணப்பட்டது. காலிமுகத்திடலில் கடற்கரைக்கு அருகாமையில் 42 நிலத்தடி கடைகளில் (B-Zone) 03 கடைகள் 2025 மே மாதம் வரை குத்தகைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்ததுடன் காலி வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள 20 நிலத்தடி கடைகளீல் (A-Zone) 16 கடைகளும் கடற்கரைக்கு அருகாமையில் அமைந்துள் 42 நிலத்தடி கடைகளில் (B-Zone) 11 கடைகளும் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன. அதற்கிணங்க குத்தகைக்கு வழங்க முடியாதிருந்த 03 கடைகளுககாக 2024 ஆம் ஆண்டில் மாத்திரம் கம்பனியினால் இழக்கப்பட்ட குத்தகை வாடகை அண்ணளவாக ரூபா 1,080,000 ஆகும். ‘‘காலி முகத்திடலின் நிருவாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கை கட்டுபாடு‘‘ சம்பந்தமாக 2024 நவம்பர் 12 ஆந் திகதிய அமைப/24/020/713/010 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் காலிமுகத்திடல் மைதானத்தினை குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள போதிலும் இன்றுவரை வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத அல்லது உடன்படிக்கையின்	வருமான வழிகளை அதிகரித்தல் மற்றும் முறைமைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுத்துள்ளதுடன் 2025 ஆம் ஆண்டின் போது இலாபத்தை அறிக்கையிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது .காலிமுகத்திடல் மைதானத்தில் காணப்படுகின்ற அனுமதியற்ற வியாபாரிகள் மற்றும் சட்ட விரோத தொழில் முயற்சியாளர்கள் கொழும்பு மாநகர சபையின் கீழ் நிருவகிக்கிப்படுகின்ற வாகனங்கள் நிறுத்தும் நிலப்பகுயில் வாகனங்களை நிறுத்தும் நிலத்தை நிருவகிக்கும் உத்தியோகத்தர்களால் அனுமதியற்ற வியாபாரிகளுக்கு குறைந்த பணத்திற்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்க்கு வாய்ப்பளித்ததன் மூலம் காலி முகத்திடல் மைதானத்தில் வியாபாரிகள்	வருமானங்களை முறைப்படியாக சேகரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் குத்தகை வாடகை செலுத்தாத கடை உரிமையாளர்கள் சம்பந்தமாக அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பிரகாரம் நிலுவைப் பணத்தை செலுத்தாவர்களின் கடைகள் 2024 நவம்பர் 30 ஆந் திகதியில் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்தும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உரிய உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்க்கு 2025 மே மாதம் வரை கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

வியாபாரம் செய்யாமை மற்றும் சில கடைகள் மூடப்பட்டதன் காரணமாக குத்தகை வாடகை செலுததாமல் விடபபட்டிருந்தது.

அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க வாடகை செலுத்த தவறியமை சம்பந்தமாக கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட உடன்படிக்கை மீறப்பட்டிருப்பதனால் சிவில் வழக்கினை தாக்கல் செய்வதன் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என அலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய சட்டரீதியான நடடிக்கை எடுப்பதற்கு ‘‘சுற்றாடலினை மீளப் பொறுப்பேற்கும் அதிகாரச் சட்டத்தின்’’ பிரகாரம் நட6வடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வேண்டுதல் கடிதம் (Demand Notice) வழங்குதல், சட்ட ஆலோசகரின் வாயிலாக சட்டரீதியான அறிவித்தல்களை வழங்குதல், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்காக ஆயத்தமாகுதல் ஆகிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ)	துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமானன காணி வளவான பெல்லம் லொக் கேட் வளவு மூன்றாந் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் கம்பனியால் ஒரு தனியார் கம்பனியுடன் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டின் போது அந்த தனியார் கம்பனி தொழில் முயற்சி நடவடிக்கைகளிலிருந்து விலகியிருந்ததுடன் உடன்படிக்கை காலம் முடிவடைவதோடு துறைமுக அதிகாரசபையின் எழுத:துமூல இணக்கப்பாடு இல்லாது இன்னுமொரு தனியார் கம்பனியுடன் 2023 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்து குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. துறைமுக அதிகாரசபையின் எழுத்துமூல இணக்கப்பாடு இல்லாது இரண்டாவதாக குததகைக்கு வழங்கிய கம்பனிக்கு வளவினை குத்தகைக்கு வழங்கியதனால் அந்த நிறுவனத்திற்கு 2023 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2025 ஏப்ரல் மாதம் வரை செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் கம்பனியால் இழக்கப்பட்டிருந்த குத்தகை வருமானம் அண்ணளவாக ரூபா 16,169,000 ஆகும். மேலும் கம்பனியால் கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட்டதனாலும் லேக் வீவ் நிறுவனத்தினால் உரிய சில நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதனால் உடன்படிக்கையை இரத்துச் செய்தலும் உரிய வளவினை துறைமுக அதிகாரசபைக்கு மீண்டும ஒப்படைக்குமாறு தெரியப்படுத்தியுள்ளதனால் அவ்வாறு ஒப்படைப்பது சம்பந்தமாக சிக்கலான நிலைமை காணப்பட்டது.	இணங்கிக் கொள்ளப்படுகன்றது. இது சம்பந்தமாக முழுமையான அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.	எழுத்துமூல மற்றும் சட்டரீதியான உடன்படிக்கையின் கீழ் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கையின் 08 ஆம் இலக்க அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை		
(i) 1.2.1(இ) அத்தியாயத்தின் பிரகாரம் தகமைபெற்ற அக்கறையுள்ள தரப்பினர்களுக்கு பெறுகைக்கு பங்குபற்றுவதற்காக நியாயமான, சமமான மற்றும் உச்ச அளவான சந்தர்ப்பம் வழங்குதல் பிரதான பெறுகை குறிக்கோளாகக் காட்டப்பட்டிருந்தது. கம்பனியின் பெறுகை நடைமுறைக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து பெறுகைகளுக்குமாக சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பயன்படுத்த வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்ததனால் மேற்கூறிய பெறுகைக் குறிக்கோள்களை நிறைவேற்றியிருக்கவில்லை.	இணங்கிக் கொள்ளப்படுகின்றது. கம்பனியால் பிரதானமாக இரண்டு பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. 1. துறைமுக அதிகாரசபைக்குத் தேவையான உபகரண சேவைகளை வழங்குவதற்காக தகமை பெற்ற நபர்கள் வழங்குதல்/ வளவினை குத்தகைக்கு வழங்குதல் (கேள்வி நடைமுறை) ஆகிய செயற்பாட்டின் போது பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு அக்கறை காட்டுகின்ற தரப்பினர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரி மேற்கொள்ளப்படுகின்றன. 2. கம்பனியின் செயற்பாடுகள் மற்றும் நிருவாகத்திற்காக தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல் பெரும்பாலும்	தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை செய்யப்பட வேண்டிய பொருட்கள் மற்றும் சேவைகளின் தன்மை, போட்டித் தன்மை மற்றும் சந்தைப் பெறுமதி, பெறுகையின் தனமை முதலிய விடய்ஙகளின் அடிப்படையில் பயன்படுத்த வேண்டிய பெறுகை நடைமுறை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

		அதிக பெறுமதியைக் கொண்ட கொள்வனவு செய்தலாக இல்லாததனால் சந்தை விலை ஒப்பீட்டு நடைமுறை பின்பற்றப்படுகின்றது.	
(ii)	2.8.1(அ) அத்தியாயத்திற்கு இணங்க பெறுகைக் குழு அங்கத்தவர்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களாக இல்லாதிருக்க வேண்டிய போதிலும் கம்பனியின் பெறுகை நடைமுறைக்கு இணங்க சிறிய பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகளில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் அக்குழுவினால் பிரதி நிதித்துவப்படுத்த வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தது.	கணக்காய்வின் சிபாரிசுகளை எதிர்வரும் காலங்களில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தேசிய பெறுகை வழிகாட்டிக் ோகவையின் பிரகாரம் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.
(iii)	3.4.3(ஈ) அத்தியாயத்திற்கு இணங்க பதிவுசெய்த வழங்குனர் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க பதிவுசெய்த வழங்குனர் பட்டியல் 04 ஆண்டுகளுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தது.	பெரும்பாலும் கம்பனியால் துறைமுக அதிகாரசபைக்கு தேவையான சேவைகளை வழங்குவதற்கு வெளிவாரி சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட சேவைகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்காக சேவை வழங்குனர்களுடனான உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டதனால் ஒவ்வொரு ஆண்டிலும் வழங்குனர்களைப் பதிவு செய்தல் நடைமுறைச் சாத்தியமற்றதாகும். கம்பனியின் செயற்பாடுகளுக்காக பொருட்களை கொள்வனவு செய்தல்	வெளிப்படைத்தன்மை, போட்டித் தன்மை முதலிய பெறுகை குறிக்கோள்களை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பதிவுசெய்த வழங்குனர் பட்டியலை நாளதுவைரயாக்குதல் வேண்டும்.

		குறிப்பிடத்தக்க அளவு சிறிய பெறுமதியை கொண்டிருப்பதனால் ஒவ்வொரு ஆண்டும் வழங்குனர்களைப் பதிவு செய்தலும் நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.	
(iv)	4.2.1(அ) அத்தியாயத்திற்கு இணங்க பெறுகை செய்யும் நிறுவனத்தினால் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கம்பனியால் 2024 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	இணங்கிக் கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் ஒரு பெறுகைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியால் வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	2024 மே 17 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் ஒரு தனியார் கம்பனியிடமிருந்து ரூபா 8,709,890 செலவு செய்து அலுவலக வளவு திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் ஒரு மோட்டார் வாகன கம்பனியிடமிருந்து ரூபா1,275,900 செலவுசெய்து 02 பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 2006 சனவரி 25 ஆந் திகதி தேசிய பெறுகை முகராண்மை சுற்றறிக்கையின் 08 ஆம் இலக்க அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மேற்கூறிய பெறுகைகளை மேற்கொள்ளும் போது சிறந்த மட்டத்தில் விலை மனுக்களை கோரும் முறைமையை பயன்படுத்துதல் மிகவும் பொருத்தமானதாக உள்ள போதிலும் பகிரங்க விலை மனுக்கள் கோருதல் இடம்பெற்றிக்காததுடன் வழிகாட்டிக் கோவையின் 5.1(அ), (ஆ) மற்றும் 5.2.1(அ) இன் பிரகாரம் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவை 2006 இன் 6.3.3.(ஆ) இன் பிரகாரம் பகிரங்கமாக கேள்வி மனுக்கள் திறத்தல் இடம்பெற்றது என்பதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததுடன் பந்தி இலக்கம் 7.7.1(அ) இற்கு இணங்க கேள்வி மதிப்பீடு இடம்பெற்றது என்பதற்கான தகவல்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை 2006 இன் 8.9 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகை செய்யும் நிறுவனத்தினால் முறையான	இணங்கி கொளப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல், கேள்விகளைத் திறத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் இணங்கிக் கொண்ட விடயங்களை உள்ளடக்கி முறையான ஒப்பந்த உடன்படிக்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கம்பனியால் அலுவலக கட்டிடங்களை திருத்தம் செய்யும் செயற்பாட்டிற்காக தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கைக்காக மற்றும் கம்பனியின் ஆளணியினருக்காக முறையான ஆட்சேரப்பு நடைமுறையினைத் தயாரித்து அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இணங்கிக் கொள்ளவில்லை. எதிர்வரும் காலங்களில் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர் எண்ணிக்கை மற்றும் ஆளணியினருக்காக முறையான ஆட்சேர்பபு நடைமுறையினை தயாரப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கிகரித்த ஆளணியனர் 38 ஆகவும் உள்ளபடியான ஆளணியினர் 17 ஆகவும் இருந்ததுடன் 21 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதனால் கம்பனியால் சிறந்த மட்டத்தில் ஆளணியை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கம்பனியில் காணப்படுகின்ற நிதி மற்றும் இலாபத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு தேவையான ஆளணிகளை மாத்திரம் ஆட்சேர்த்து செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தேவைப்பாட்டினதும் இயலளவினதும் அடிப்படையில் எதிர்காலத்தில் தேவையான ஆளணியினரை காலத்துக்கு காலம் சேர்த்துக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	ஆளணியினரை சிறந்த மட்டத்தில் பேணுவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) மனித வளங்கள் முகாமைத்துவ சிக்கல் மற்றும் சட்ட ரீதியான சிக்கல்களை தீர்த்துவைக்கும் குறிக்கோளில் கம்பனியால் இரண்டு ஆலோசகர்கள் சேர்த்துக்கொள்ளக்கட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்கள் நிறைவேற்றிய செயற்பாடுகள் தொடர்பாக காலரீதியாக மேற்கொண்ட கண்காணிப்புக்கள் மற்றும் நிறைவேற்றிய செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த உத்திரோயகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,050,000 படியாக செலுத்தபட்டிருந்த போதிலும் கம்பனியின் வழக்கு நடவடிக்கைகளும் வெளித்தரப்பினர்கள் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,347,092 செலுத்தப்பட்டிருந்தது.	இணங்கிக் ்ொள்ளப்படுகின்றது.	கம்பனியின் மனித வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் தேவையற்ற செலவுகளை குறைத்தல் வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிறுவன ரீதியான கடப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டுடன் முடிவுசெய்யப்பட்ட தந்திரோபாய திட்டத்தினை உரிய வரிசை அமைச்சின் செயலாளரினூடாக பணிப்பாளர் நாயகம் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் அல்லது பணிப்பாளர் நாயகம், தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2024 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இணங்கி கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டுடன் தந்திரோபாய திட்டத்தினை உரிய வரிசை அமைச்சின் செயலாளரினூடாக பணிப்பாளர் நாயகம் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிறுவன ரீதியான கடப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அல்லது நிறுவன தலைவருக்கு நேரடியாக அறிக்கையிடுவதற்கு முடியுமான வகையில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் உள்ளக கணக்காய்வாளர் பதவி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	இணங்கி கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒரு உள்ளக கணக்காய்வாளரினை நியமிப்பதற்காக கம்பனியால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 உள்ளக கணக்காய்வு குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிறுவனரீதியான கடப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நிறைவேற்றுனர் அல்லாத மூன்று பணிப்பார்களை அல்லது சபையின் நிறைவேற்றுனர் அல்லாத 1/3 பணிப்பாளர்களை உள்ளடக்கும் வகையில் ஒரு உள்ளக கணக்காய்வு குழு நியமிக்கப்பட வேண்டியதுடன் அக்கணக்காய்வு குழு ஆகக்குறைந்தது 03 மாதத்திற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் ஒரு உள்ளகக் கணக்காய்வு குழுவினை நியமித்து கணக்காய்வு குழு கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இணங்கி கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கணக்காய்வுக் குழுவினை நியமிப்பதற்கும் கணக்காய்வுக் குழு கூட்டங்களை நடாத்துவதற்கும் கம்பனியால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.